**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 198 / 2019**

2021 ஆம் ஆண்டு மாதம் நாள் கிழமை

என்பவரது சாட்சியாகிய இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி செல்வி. எஸ். கிருத்திகா, B.A.,B.L., (Hons),L.L.M.. மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி,(முழு கூடுதல் பொறுப்பு) அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 02.03.2021 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | சித்ராதேவி (PW-1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| சாதி: | | வயது : | |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை: 02.03.2021**

நான் இவ்வழக்கின் 2 ம் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

21.12.2009 ல் 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1 ம் வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்து தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2 ம் வாதியின் ஆதார்

அட்டை அசலுடன் ஒப்பீடு செய்து தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3ம் வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்து தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாச்சொத்திற்கான வில்லங்க சான்றின் கனிணி நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.